# யூன் – 01 – வியாழன்

## புனித ஜஸ்ரின்

### “ ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து, அவரே என் கிண்ணம்” – தி.பா16:5

## முதல் வாசகம்: திருத்தூதர் பணி 22:30 23 : 6 – 11

அந்நாட்களில் யூதர்கள் பவுல்மீது என்ன குற்றம் சுமத்துகிறார்கள் என்பதை உறுதியாக அறிய ஆயிரத்தவர் தலைவர் விரும்பினார். எனவே, மறுநாள் தலைமைக் குருக்களும், தலைமைச் சங்கத்தினர் அனைவரும் கூடிவருமாறு அவர் ஆணை பிறப்பித்துப் பவுலை சிறையிலிருந்து கொண்டு வந்து அவர்கள் முன் நிறுத்தினார். அவர்களுள் ஒரு பகுதியினர் சதுசேயர் என்றும், மறுபகுதியினர் பரிசேயர் என்றும் பவுல் அறிந்து, ”சகோதரரே! நான் ஒரு பரிசேயன். பரிசேய மரபில் பிறந்தவன் இறந்தோர் உயிர்த்தெழுவர் என்னும் எதிர்நோக்கின் பொருட்டு விசாரிக்கப் படுகிறேன்” என்று தலைமைச் சங்கத்தின் முன் உரத்த குரலில் கூறினார். அவர் இப்படிச் சொன்னபோது பரிசேயருக்கும் சதுசேயருக்குமிடையே வாக்குவாதம் எழுந்தது. எனவே அங்குத் திரண்டிருந்தோர் இரண்டாகப் பிரிந்தனர். சதுசேயப் பிரிவினர் வானதூதரும் உயிர்த்தெழுதல், ஆவிகள் ஆகியனவும் இல்லை என்று கூறி வந்தனர் பரிசேயர் இவையனைத்தும் உண்டென ஏற்றுக் கொண்டனர். அங்குப் பெருங்கூச்சல் எழுந்தது. பரிசேயப் பிரிவினைச்சேர்ந்த மறைநூல் அறிஞருள் சிலர் எழுந்து, ”இவரிடம் தவறொன்றையும் காணோமே! வானதூதர் ஒருவரோ, ஓர் ஆவியோ இவரோடு பேசியிருக்கலாம் அல்லவா!” என வாதாடினர். வாக்குவாதம் முற்றவே அவர்கள் பவுலைப் பிய்த்தெறிந்து விடுவர் என ஆயிரத்தவர் தலைவர் அஞ்சி படைவீரரை வரச்சொல்லி அவரை அவர்கள் நடுவிலிருந்து பிடித்துக் கோட்டைக்குள் கூட்டிக்கொண்டு செல்லுமாறு ஆணை பிறப்பித்தார். மறுநாள் இரவு ஆண்டவர் அவரருகில் நின்று, ”துணிவோடிரும் எருசலேமில் என்னைப்பற்றி சான்று பகர்ந்தது போல உரோமையிலும் நீர் சான்றுபகர வேண்டும்” என்றார்.

**பதில்பாடல் :** இறைவா என்னைக் காத்தருளும் நான் உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்

## நற்செய்தி : யோவான் 17 : 20 - 26

அக்காலத்தில் இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து வேண்டியது: “தந்தையே என் சீடர்களுக்காக மட்டும் நான் வேண்டவில்லை. அவர்களுடைய வார்த்தையின் வழியாக என்னிடம் நம்பிக்கை கொள்வோருக்காகவும் வேண்டுகிறேன். எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும். நாம் ஒன்றாய் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருக்குமாறு நீர் எனக்கு அருளிய மாட்சியை நான் அவர்களுக்கு அளித்தேன். இவ்வாறு, நான் அவர்களுள்ளும் நீர் என்னுள்ளும் இருப்பதால் அவர்களும் முழுமையாய் ஒன்றித்திருப்பார்களாக. இதனால் நீரே என்னை அனுப்பினீர் எனவும் நீர் என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல் அவர்கள் மீதும் அன்பு கொண்டுள்ளீர் எனவும் உலகு அறிந்து கொள்ளும். ”தந்தையே, உலகம் தோன்றுமுன்னே நீர் என்மீது அன்புகொண்டு எனக்கு மாட்சி அளித்தீர். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சியைக் காணுமாறு அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் என விரும்புகிறேன். நீதியுள்ள தந்தையே, உலகு உம்மை அறியவில்லை. ஆனால் நான் உம்மை அறிந்துள்ளேன். நீரே என்னை அனுப்பினீர் என அவர்களும் அறிந்து கொண்டார்கள். நான் அவர்களோடு இணைந்திருக்கவும் நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்கள்மீது இருக்கவும் உம்மைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தேன் இன்னும் அறிவிப்பேன்’’ என்றார்.

**தியானம்:** 2017ம் வருட 6ம் மாதத்தில் கால் பதிக்கும் நாம் எல்லாம் வல்ல இறைவனுக்கு முதலில் நன்றி சொல்லுவோம். இறைமகன் இயேசுக்கிறிஸ்து பாவிகளாகிய எம்மீது கொண்டுள்ள அன்பானது நீளம், அகலம், ஆழம் காணமுடியாதது. இப்படிப்பட்ட அன்பையே “நான் அவர்களோடு இணைந்திருக்கவும். நீர் என்மீது கொண்டிருந்த அன்பு அவர்கள்மீது இருக்கவும், உம்மைப்பற்றி அவர்களுக்கு அறிவித்தேன். இன்னும் அறிவிப்பேன்’’ (யோவான்17:26) என்று நற்செய்தி விளக்குகின்றது. பிதாவும், மகனும் பாவிகளாகிய எம்மோடு இணைந்திருக்க விரும்புகின்றார்கள். இவ்வுலகில் பாவிகளாகப் பிறந்த எமக்கு, இதனைவிட வேறென்ன பாக்கியம் தேவை? நினைத்துப் பார்க்கும்போதே உடலெல்லாம் மின்சாரம் பாய்வது போன்ற உணர்வு ஏற்படவில்லையா? இன்று எம்மத்தியில் நடப்பதென்ன? தமது சாயலாக எம்மைப்படைத்த இறைவனை உண்மையில் நாம் அன்பு செய்கின்றோமா? அல்லது இறை வார்த்தை அனைத்தையும் செய்து முடிக்கும் என்று விசுவசிக்கின்றோமா? திருமகன் இயேசு சிலுவைச் சாவிற்கே தம்மை ஒப்புவித்து அன்புசெய்து வாழ்ந்து காட்டியது போல நாமும் வாழுகின்றோமா? எமது அயலவரை நாம் அன்பு செய்கின்றோமா? எமது குடும்பத்தில், சமூகத்தில் நாம் யாரை அன்பு செய்கின்றோம்? இன்று அன்பிற்காக பல்லாயிரக்கணக்கான இதயங்கள் ஏன் ஏங்குகின்றன? இறைவனை அன்பு செய்கிறேன் என்று கூறிக்கொண்டு எமது குடும்பத்தில், சமூகத்தில் மற்றவர்களை வெறுத்து, ஒதுக்கி, ஓரங்கட்டி வாழ்வதல்ல கிறிஸ்தவம். இந்த உண்மையை நாம் உணர்ந்து வாழ்ந்தால் இறுதிநாளில் “ஆண்டவர் தாமே என் உரிமைச் சொத்து. அவரே என் கிண்ணம். எனக்குரிய பங்கைக் காப்பவரும் அவரே‘‘ என மீட்பின் நாளில் நாம் உறுதியோடு பாடமுடியும். எனவே இறுதிக்காலம் இதுவென உணர்ந்து வாழுவோம்.